# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

**2015 ஒக்டோபர் மாதம் 20 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

## நிகழ்ச்சி நிரல்

**I.** **தவிசாளரின் அறிவிப்புக்கள்**

**II.** **அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்**

**III.** **செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

**IV.** **மனுக்கள்**

**V.** **கேள்விகள்**

**01.** **கௌரவ மஞ்சு சிறீ அரங்கல - எதிர்க்கட்சித் தலைவரினால் கௌரவ சுகாதார, உள்நாட்டு வைத்திய, சமூக நலன்புரி, நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவை, மகளிர் விவகாரம் அத்துடன் சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரிடம் 2015.10.06 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி :** **(Îæ/vi (1)15/27)**

அ. மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயத்திற்கு உரிய வாகனங்கள் பணிப்பாளரின் நிர்வாகத்திற்கு புறம்பாக வெளி நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன என்பதனை அறிவீர்களா ?

ஆ. அவ்வாறு வெளி நபர்களுக்கு ஒப்படைக்கப்பட்டு இருந்த வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

இ. அவ் வாகனங்களின் வகை மற்றும் பதிவு இலக்கங்களைக் குறிப்பிடுவீர்களா ?

ஈ. அவ் வாகனங்கள் சாரதிகளுடனா விடுவிக்கப்பட்டிருந்தன ?

உ. சாரதிகளின் சம்பளம், எண்ணெய், பழுதுபார்ப்பு மற்றும் சேவை நடவடிக்கை உள்ளிட்ட ஏனைய செலவு என்பன
   - i. சுகாதாரத் திணைக்களத்தினாலா ?
   - ii. இல்லையாயின் வேறு நபர்களினாலா மேற்கொள்ளப்பட்டன ?

ஊ. இவ் வாகனங்களில் எத்தனை வாகனங்கள் மீண்டும் ஒப்படைக்கப்பட்டு உள்ளன ? மீண்டும் ஒப்படைக்கப்பட்ட வாகனங்களின் பதிவு இலக்கம் மற்றும் மீண்டும் ஒப்படைக்கப்பட்ட நாட்களைக் குறிப்பிட முடியுமா ?

எ. ஒப்படைக்கப்படாத வாகனங்கள் எத்தனை எனவும் ? அவற்றின் வகை மற்றும் பதிவு இலக்கங்களைக் குறிப்பிட முடியுமா ?

ஏ. அவ்வாறு ஒப்படைக்கப்படாத வாகனங்களைப் பயன்படுத்துபவர்கள் யார் ?
   - (i) அவ்வாறு ஒப்படைக்கப்படாத வாகனங்கள் தொடர்பாக நீங்கள் எடுக்கும் நடவடிக்கை யாது ?

**02.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் 2015.10.06 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி :** **(Îæ/vi (1)15/29)**

அ. மேல் மாகாணத்தில் ஆசிரியர்களுக்காக ஆசிரிய செயலாற்றுகைப் பத்திரம் மாகாண கல்விக் காரியாலயத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டு உள்ளதா ?

ஆ. அவ் ஆசிரிய செயலாற்றுகைப் பத்திரத்தினை ஆசிரியர்களின் சம்பள ஏற்றத்தினை வழங்க உபயோகித்துக் கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதா ?

இ. ஆசிரிய செயலாற்றுகை பத்திரத்தினைப் பெற்றுக் கொடுக்காத ஆசிரியர்களுக்கு சம்பள ஏற்றத்தை வழங்க வேண்டாம் என ஆலோசனை வழங்கப்பட்டு உள்ளதா ?

ஈ. அந்த செயலாற்றுகைப் பத்திரம் ஆசிரிய சங்கத்தின் அங்கத்தவர்களின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட்டதொன்றா ?

உ. அப்படியாயின் அது எந்த ஆசிரிய தொழிற்சங்கம் என சபைக்கு முன்வைப்பீர்களா ?

ஊ. அந்த செயலாற்றுகைப் பத்திரம் எல்லா வலையங்களுக்கும் வழங்கப்பட்ட ஒன்றா ? அவ்வாறு இல்லாவிடின் தெரிவு செய்யப்பட்ட சில வலையங்களுக்கு மட்டும் வழங்கப்பட்ட ஒன்றா ?

**03.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் தகவல் தொழினுட்ப அமைச்சரிடம் 2015.10.06 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (Îæ/vi (1)15/30)**

அ. போதுமான அளவு மாணவர்களின் எண்ணிக்கை இல்லாததன் காரணமாக மே.மா/கள/ஹீன்கெந்த ஆரம்ப பாடசாலையை மூடி விடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. எவ்வாறான போதும் கிராம மக்களின் தலையீட்டினால் இவ் வித்தியாலயத்தை ஹீன்கெந்த மஹா வித்தியாலயத்துடன் ஒன்றிணைத்து அபிவிருத்தி செய்யப்பட்டது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

இ. தற்போது இவ் வித்தியாலய மாணவர்களின் எண்ணிக்கை 665 (1-5 தரங்களில்) வரை உயர்ந்துள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஈ. தற்போது இப் பாடசாலைக்கு காணப்படும் கேள்விக்கு இணங்க பாடசாலையில் சேரும் பிள்ளைகளின் எண்ணிக்கை உயர்ந்ததன் காரணமாக காணப்படும் வகுப்புக்களின் எண்ணிக்கையை 3 இருந்து 4 வரை அதிகரிப்பதற்கு வலையக் கல்விக் காரியாலயத்தின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

உ. எவ்வாறான போதும் அவ் வகுப்புக்களின் அதிகரிப்புக்கு ஏற்ற முறையில் தேவையான ஆசிரியர்களும், கட்டட வசதியும் இன்னும் வழங்கப்படவில்லை என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஊ. இப் பாடசாலைக்குத் தேவையான ஆசிரியர்களைப் பெற்றுக் கொடுத்து வகுப்புக்களுக்கு உரிய வசதிகளை ஏற்படுத்துவீர்களா ?

எ. அப்படியாயின் எப்போது ?

**04.** **கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் தகவல் தொழினுட்ப அமைச்சரிடம் 2015.10.06 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி: (Îæ/vi (1)15/32)**

அ. கல்விக்காக தேறிய தேசிய உற்பத்தியில் 6% ஒதுக்கப்படல் வேண்டும் என்ற நாட்டின் தேசிய அரசின் வேலைத் திட்டத்திற்கு நீங்கள் இணங்குகின்றீர்களா ?

ஆ. அதற்கு இணைந்த வகையில் மேல் மாகாணத்தின் பாடசாலை அபிவிருத்திக்காக ஆயத்தம் ஒன்று காணப்படுகின்றதா ?

இ. 2016 மாகாண பாடசாலைகளுக்கு முதலாம் தரத்திற்கு, ஆறாம் தரத்திற்கு மற்றும் உயர் தரங்களுக்கு பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்ளும் போது பெற்றோரினால் பாடசாலைக்குச் செலுத்தவேண்டிய நிதி வெவ்வேறாக எவ்வளவு ?

ஈ. பெற்றோரினால் பௌதீக வளம் ஒன்றாக பாடசாலைக்கு வழங்க வேண்டிய ஏதாவதொன்று காணப்படுகின்றதா ?

உ. இதற்கு மேலதிகமாக நிதி மற்றும் உபகரணங்களை மானியமாக பெற்றுக்கொடுக்குமாறு அதிபர்கள் பெற்றோர்களுக்கு நிர்ப்பந்தம் செய்தால் எடுக்கும் நடவடிக்கை யாது ?

ஊ. அப்படி இல்லையாயின் ஏன் ?

**05.** **கௌரவ சுசில் கிந்தெல்பிடிய உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம் அத்துடன் தகவல் தொழினுட்ப அமைச்சரிடம் 2015.10.06 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (Îæ/vi (1)15/33)**

அ. 2015 ஜனவரி 01 ஆந் திகதி தொடக்கம் 2015 செப்டெம்பர் 01 ஆந் திகதி வரையிலான காலத்தினுள் ஒவ்வொரு விளையாட்டுக்குமாக ஒதுக்கிய நிதி எவ்வளவு ?

ஆ. ஒவ்வொரு விளையாட்டுக்குமாக செலவு செய்த நிதி எவ்வளவு ?

இ. மாவட்டத்திற்கு இணங்க எவ்வாறு செலவு செய்யப்பட்டது ?

ஈ. பலாபலனைப் பெற்றுக் கொண்ட விளையாட்டுச் சங்கங்கள் மற்றும் அவ் விளையாட்டுச் சங்கங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் அளவு வெவ்வேறாக எவ்வளவு ?

உ. கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் எவை ? எண்ணிக்கை எவ்வளவு ? அப் பொருட்களை கொள்வனவு செய்த தாபனம் எது மற்றும் செலவு செய்த நிதி எவ்வளவு ?

ஊ. மேல் மாகாண விளையாட்டுத் துறைக்காக செலவுகளை மேற்கொண்ட போது நிதி பகிர்ந்தளிக்கப்பட்ட விதம் தொடர்பாக ஊழல் மற்றும் மோசடி ஒன்று நிகழ்ந்துள்ளது என்பதை நீங்கள் அறிவீர்களா ?

எ. அப்படியாயின் அதற்காக எடுக்கும் நடவடிக்கை யாது ?

**06.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் தகவல் தொழினுட்ப அமைச்சரிடம் 2015.10.06 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (Îæ/vi (1)15/34)**

அ. i. மேல் மாகாணத்தினுள் காணப்படும் ஆரம்பப் பாடசாலைகள் உங்கள் அமைச்சுக்கு உரியனவா ?

ii. அப்படியாயின் அது எவ் ஏற்பாட்டின் கீழ் ?

ஆ. i. ஆரம்பப் பாடசாலைகள் தொடர்பான விடயப் பொறுப்புப் பணிப்பாளர்கள் மாகாண கல்வி அமைச்சின் கீழ் பதவி வகித்தவர்களாக காணப்பட்டனரா ?

ii. அது எந்த ஏற்பாட்டின் கீழ் ?

iii. முதலமைச்சரினால் சென்ற தினங்களுக்கு முன் பகிரங்க கூட்டம் ஒன்றில் அவ்வாறு பணிப்பாளர்கள் காணப்படுகின்றனர் என அறிவிக்கப்பட்டது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

இ. i. இவ் வேளையில் மாகாணத்தில் காணப்படும் எத்தனை அரச பாடசாலைக் கட்டடங்களில் ஆரம்பப் பாடசாலைகள் நடாத்தப்படுகின்றன ?

ii. அது எந்த ஏற்பாட்டின் கீழ் ?

iii. அப் பாடசாலைகளினுள் ஆரம்பப் பாடசாலைகளை நடாத்துவதற்கு யார் தீர்மானித்தனர் ?

**07.** **கௌரவ ஜனகதீபால் வெலிவத்த உறுப்பினரினால் கௌரவ கடற்றொழில், வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு : (Îæ/vi (1)15/37)**

அ. ஹோமாகம பொதுச் சபை கூட்டுறவுச் சங்கத்தின் ஆணையாளரின் அதிகாரத்தின் படி நியமிக்கப்பட்ட தலைவரின் அதிகாரங்களின் கீழ் 2015.08.30,31 ஆகிய தினங்களில் அடகு வைக்கப்பட்டிருந்த தங்க நகைகளை விற்பதற்கு உரிய ஏலம் ஒன்று இடம்பெற்றது என்பதை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. இதற்காக முன்வைக்கப்பட்டிருந்த தங்க நகைகளின் அளவு எவ்வளவு ?

இ. அத் தங்க நகைகளுக்காக அடகு வைத்தவர்களுக்கு சங்கத்தினால் வழங்கப்பட்டிருந்த முற்பண நிதி எவ்வளவு ?

ஈ. அத் தங்க நகைகளுக்காக அறவிடப்பட வேண்டிய வட்டி நிதி மற்றும் ஏனைய செலவு நிதி எவ்வளவு ?

உ. அங்கு ஒரு பவுண் தங்கம் விற்கப்பட்டுள்ள விலை எவ்வளவு ?

ஊ. அவ் ஏலத்தினால் சங்கம் பெற்றுக் கொண்டுள்ள தேறிய நட்டம் அல்லது இலாபம் எவ்வளவு ?

எ. அவ் ஏலமானது பொருட்கள் வெவ்வேறாக மொத்தமாக விற்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ஏலம் ஒன்றா ?

ஏ. அதற்கு அங்கீகாரத்தை வழங்கியவர் யார் ?

**08.** **கௌரவ ஜனகதீபால் வெலிவத்த உறுப்பினரினால் கௌரவ கடற்றொழில், வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு : (Îæ/vi (1)15/38)**

அ. ஹோமாகமை பொதுச் சபை கூட்டுறவுச் சங்கத்தினால் 2014.09.05,06,07 ஆகிய தினங்களில் தங்க நகைகளை விற்பதற்கு உரிய ஏலம் ஒன்று நடைபெற்றது என்பதனை அறிவீர்களா ?

ஆ. அதற்காக முன்வைக்கப்பட்டிருந்த தங்க நகைகளின் அளவு எவ்வளவு ?

இ. அத் தங்க நகைகளுக்காக சங்கத்தினால் அடகு வைத்தவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த முற்பண நிதி எவ்வளவு ?

ஈ. அத் தங்க நகைகளுக்காக அறவிடப்பட வேண்டிய வட்டி நிதி மற்றும் ஏனைய செலவு நிதி எவ்வளவு ?

உ. அங்கு ஒரு பவுண் தங்கம் விற்கப்பட்டுள்ள விலை எவ்வளவு ?

ஊ. அவ் ஏலத்தினால் சங்கம் பெற்றுக் கொண்டுள்ள தேறிய நட்டம் அல்லது இலாபம் எவ்வளவு ?

**09.** **கௌரவ ஜனகதீபால் வெலிவத்த உறுப்பினரினால் கௌரவ கடற்றொழில், வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு : (Îæ/vi (1)15/39)**

அ. 2014/2015 ஆம் ஆண்டுகளில் மேல் மாகாண கூட்டுறவு கிராமிய வங்கிகளில் மற்றும் மாவட்ட கிராமிய வங்கி சங்கங்களில் எவ்வளவு தங்க நகைகள் ஏலத்தில் இடப்பட்டுள்ளன ? அதன் அளவு எவ்வளவு ?

ஆ. அப்போது அந்தந்த சங்கங்கள் பவுண் ஒன்றை விற்றுள்ள விலை என்ன ?

இ. எக் கூட்டுறவுச் சங்கமானது அக் காலத்தில் மொத்தமாக விற்பனை செய்துள்ளது ?

ஈ. அத் தங்க ஏல விற்பனையின் போது அந்தந்த சங்கங்கள் பெற்றுக் கொண்டுள்ள தேறிய இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு ?

**10.** **கௌரவ சலோசன கமகே உறுப்பினரினால் கௌரவ கடற்றொழில், வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு : (Îæ/vi (1)15/40)**

அ. கிராமிய வங்கிகளில் காணப்படும் தங்க நகைகளை ஏலத்தில் இடும் போது எத் தாபனம், முகவர் தாபனமாக செயற்படுகிறது ?

ஆ. கிராமிய வங்கி மற்றும் முகவர் தாபனத்திற்கு இடையே காணப்படும் பிணைப்பு மற்றும் பொறுப்பு யாது ? (ஏலம் ஒன்று எழும் சந்தர்ப்பத்தில்)

இ. அதற்காக அதிகாரத்தில் காணப்படும் சட்டங்கள் யாவை ?

ஈ. தங்க நகைகள் ஏலத்திற்கு இடப்பட்ட பின்னர் அதன் இறுதி தீர்மான அதிகாரம் யாரிடம் உள்ளது ?

**11.** **கௌரவ சலோசன கமகே உறுப்பினரினால் கௌரவ கடற்றொழில், வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு : (Îæ/vi (1)15/41)**

அ. தற்போது கூட்டுறவுத் திணைக்களத்தினால் பயன்படுத்தப்படும் கூட்டுறவு கிராமிய வங்கி நடவடிக்கை ஒழுங்கு விதிகள் மேல் மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டரீதியான ஆவணம் ஒன்றாகுமா ?

ஆ. அதனை அங்கீகரித்தவர் யார் ? எப்போது ?

இ. மேலே கூறப்பட்ட ஒழுங்கு விதிகள் மேல் மாகாண கூட்டுறவுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டு தற்போது பயன்படுத்தப்படும் கிராமிய வங்கி நடவடிக்கை ஒழுங்கு விதிகளா ?

ஈ. மேல் மாகாண சபையின் 1998 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க கூட்டுறவு நியதிச் சட்டத்தின் 62(2) (யா) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் மேலே கூறிய கிராமிய வங்கி நடவடிக்கை ஒழுங்கு விதிகள் தயாரிக்கப்பட்டுள்ளனவா ?

உ. மேற் கூறிய நடவடிக்கை ஒழுங்கு விதிகள் அரச வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் வெளியிடப்பட்டுள்ளனவா ?

ஊ. மேல் மாகாண சபையின் 2011 இன் 04 ஆம் இலக்க கூட்டுறவு நியதிச் சட்டத்தின் 36(6) ஆம் இலக்கத்தின் கீழ் வரும் மேற் கூறிய கிராமிய வங்கி நடவடிக்கை ஒழுங்கு விதிகள் அங்கீகரிக்கப்பட்டனவா ? அது எப்போது ?

எ. அதன் கீழ் தண்டனை வழங்குவதற்காக இந்த நடவடிக்கை ஒழுங்கு விதிகளை பயன்படுத்துவதன் காரணமாக இது வரை உங்களினால் மேற்கொள்ளப்பட்ட விடயங்களை, அதிகாரம் அற்ற மற்றும் பயனற்றவையாக்கும் என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

**12. கௌரவ மஹேஷ் அல்மேதா உறுப்பினரினால் கௌரவ கடற்றொழில், வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு : (Îæ/vi (1)15/42)**

அ. 2015.09.25 ஆந் திகதி பி.ப. 4.30 மணி அளவில் ஹங்வெல்ல நகர சபைக்கு அண்மையில் பஸ் வண்டி ஒன்று டிப்பர் வண்டியுடன் மோதியதன் காரணமாக வீதியில் பயணத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நபர் ஒருவர் மரணமெய்தியுள்ளார் என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. இந்த பஸ் வண்டி பயணிகள் போக்குவரத்து அதிகார சபைக்கு உரிய அவிஸ்ஸாவெல்ல - கொழும்பு (பழைய வீதி) வீதியில் பயணத்தில் ஈடுபடும் பஸ் வண்டி ஒன்று என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

இ. இவ் விபத்து இடம்பெறும் வேளையில் இவ் பஸ் வண்டியில் இருந்த சாரதியிடம் செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரம் ஒன்று இருக்கவில்லை என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஈ. வீதி பயண அனுமதிப் பத்திரம் ஒன்று இல்லாமல் பயணத்தில் ஈடுபட்டிருந்தால் இச் சாரதி மற்றும் அவ் பஸ் வண்டியின் வீதிப் பயண அனுமதிப் பத்திர உரிமையாளருக்கு எதிராக பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினால் எடுக்கப்படும் சட்டரீதியான நடவடிக்கைகள் என்ன ?

உ. அவ்வாறு எடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பாக இக் கௌரவ சபையை அறிவுறுத்துவீர்களா ?

ஊ. செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரம் ஒன்று இல்லாத சாரதி ஒருவரைப் பயன்படுத்தி இவ் பஸ்வண்டி பயணத்தில் ஈடுபடுத்தப்பட்டு இருந்தால் அவ் பஸ் வண்டியின் வீதி பயண அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்வதற்கு நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்களா ?

எ. அப்படி இல்லையாயின் ஏன் ?

**13. கௌரவ மஹேஷ் அல்மேதா உறுப்பினரினால் கௌரவ கடற்றொழில், வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு : (Îæ/vi (1)15/43)**

அ. மேல் மாகாண சபையின் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் கீழ் வீதிப் பரிசோதனையாளர்கள் எத்தனை பேர் கடமையில் ஈடுபட்டுள்ளனர் ?

ஆ. அவ் உத்தியோகத்தர்களுக்கு உள்ள பணி மற்றும் பொறுப்பு யாது ?

இ. அவ் உத்தியோகத்தர்களினால் நாளொன்றுக்கு எத்தனை பஸ் வண்டிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன ?

ஈ. சென்ற வாரத்தினுள் மேல் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் கீழ் பயணத்தில் ஈடுபடும் பஸ் வண்டிகளுக்கு நிகழ்ந்த விபத்துகளின் எண்ணிக்கை எத்தனை ?

உ. அவ் விபத்துக்கள் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள சட்ட ரீதியான நடவடிக்கைகள் எவை ?

ஊ. ஒழுங்கான சாரதி அனுமதிப் பத்திரம் ஒன்று இல்லாது பஸ் வண்டியைச் செலுத்திய சாரதிகள் எத்தனை பேர் ? (இக் காலத்தினுள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளனர்)

எ. அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டுள்ள சாரதிகள் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது ?

ஏ. அவ்வாறு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக இக் கௌரவ சபையை அறிவுறுத்துவீர்களா ?

ஐ. இல்லையாயின் ஏன் ?

**14. கௌரவ மஞ்சு சிறீ அரங்கல - எதிர்க்கட்சித் தலைவரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம் அத்துடன் தகவல் தொழினுட்ப அமைச்சரிடம் கேட்பதற்கு : (Îæ/vi (1)15/44)**

அ. மேமா/கொ குணசிங்ஹ வித்தியாலயத்தின் நிர்மாணம் மற்றும் பழுதுபார்ப்புக்களின் ஒப்பந்தக்காரர் ஒருவராக இலக்கம் 64, ஆட்டிகல, ஹங்வெல்ல. என்ற முகவரியைச் சேர்ந்த திரு. வி.டி.ரீ. அறுணகுமார அவர்கள் செயற்பட்டுள்ளார் என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. அவரினால் 2014 ஆம் ஆண்டில் அப் பாடசாலையின் முதலாம் தர வகுப்பிற்கு உரிய அறை ரூபா. 150,000/- பெறுமதியிலும் மற்றும் காரியாலய கட்டடம் ரூபா. 500,000/- செலவிலும் பழுதுபார்ப்பு மேற்கொள்ளப்பட்டது என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

இ. இந் நிர்மாணம் கொழும்பு பிரதேச செயலாளர் காரியாலயத்தின் மற்றும் கல்வித் திணைக்களத்தின் பொறியியலாளரின் மேற்பார்வைக்கு உட்பட்டு கொடுப்பனவு அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஈ. அக் கொடுப்பனவுக்காக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு அக் கொந்தராத்துக்கு உரிய நிதி வரவு வைக்கப்பட்டுள்ளது என்பதனை அறிவீர்களா ?

உ. அந் நிதி வழங்கப்பட்டிருந்த வேளையில் ரூபா 346,668/- நிதியும் மற்றும் தடுப்பு நிதியான ரூபா. 65,000/- நிதியும் ஒப்பந்தக்காரர் திரு. அறுணகுமார அவர்களுக்கு செலுத்தப்படவில்லை என்பதனை அறிவீர்களா ?

ஊ. இந் நிர்மாணங்களின் அங்கீகரிக்கப்பட்ட நிதியில் 5% கொமிஸ் ஒன்று பாடசாலை அபிவிருத்தி சங்கத்திற்கு ஒப்பந்தக் காரரினால் செலுத்தப்பட்டுள்ளது என்பதனை அறிவீர்களா ?

எ. இவ் ஒப்பந்தக் காரருக்கு செலுத்துவதற்காக பாடசாலை அபிவிருத்தி சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதியினை அவருக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பீர்களா ?

ஏ. இவ்வாறு சட்டரீதியான கொடுப்பனவினை தட்டிக் கழித்துள்ள அதிபர் உள்ளிட்ட பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள் தொடர்பாக எடுக்கும் நடவடிக்கை யாது ?

**15.** **கௌரவ ஹரிஸ்சந்திர த கொஸ்தா உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :**
**(Îæ/vi (1)15/45)**

அ. நகர அபிவிருத்தி அதிகார சபையின் அபிவிருத்தி அனுமதிப் பத்திரம் மற்றும் கெஸ்பேவ நகர சபையின் விடுதி நிர்மாண அனுமதிப் பத்திரங்களை பெற்றுக் கொண்ட பன்னிபிடிய, பலன் வத்தை சாமோதயபுற இல. 332/12 இல் வசிக்கும் திரு. ஜயந்த குமார மற்றும் அவரது மகளினால் வீட்டினைக் கட்டிய போது கெஸ்பேவ நகர சபையின் உத்தியோகத்தர்களினால் 2015.04.01 ஆந் திகதி பொய்யான குற்றச் சாட்டுக்களை முன்வைத்து அந் நிர்மாணத்தை தடை செய்யப்பட்டு 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் அநீதியான முறையில் பழிவாங்க நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. இது தொடர்பாக மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திணைக்களத்திற்கு மேற்கொள்ளப்பட்ட CU14997 ஆம் இலக்க முறைப்பாடு தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது ?

## VI. வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை

## VII. அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும்

## VIII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

## IX. சபை நடவடிக்கை I

**<u>சபை நடவடிக்கை தொடர்பான விடயப் பொறுப்பு அமைச்சர் (மே.மா)</u> :**

பிரேரணை :

"இன்றைய தினம் பொது நடவடிக்கை முக்கியத்துவம் பெற வேண்டும். "

**சபை நடவடிக்கை - II**

**<u>சபை நடவடிக்கை தொடர்பான விடயப் பொறுப்பு அமைச்சர் (மே.மா)</u> :**

பிரேரணை :

"இன்றைய தினம் நிகழ்ச்சி நிரலில் பொது நடவடிக்கை விடயத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு விதி இலக்கம் 57(1), 57(4), 57(5) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளினால் எந்தவொரு தடையும் எற்படக் கூடாது எனக் கருதிச் செயற்பட வேண்டும். "

## X. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

**01. கௌரவ ரொட்னி பிரேசர் அவர்கள்**

பிரதேச சபை, நகர சபை மற்றும் மாநகர சபையை அங்கத்துவப் படுத்தும் உறுப்பினர்களினால் மேற்கொள்ளப்படும் அரசியல் மற்றும் சமூக செயற்பாடுகள் மிகவும் அதிகமாகும். இலங்கை அரசியலில் உறுப்பினர் அமைப்பில் ஆரம்ப மட்டத்தில் காணப்படும் அவர்களினால் இடம்பெறும் மேற் கூறிய சேவைகள் பாரியதொன்றாகும் .

சில அங்கத்தவர்கள் தமது வாழ்நாள் முழுவதும் இச் சமூக செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர். பெரும்பாலான அங்கத்தவர்களுக்கு உரிய வருமான வழி ஒன்று இல்லை, சமூக நடவடிக்கைகளில் முழு நேரமும் ஈடுபட்டுள்ளபடியால் அவர்களுக்கு வேலைகளில் ஈடுபடுவது கஷ்டமாக உள்ளது.

உள்ளூராட்சி அங்கத்தவர் ஒருவருக்கு கிடைக்கும் சிறிய தொகை படி ஒருபோதும் போதுமானதல்ல அது அவர்களின் நாளாந்த செலவு நடவடிக்கைகளுக்கும் போதுமானதாக இல்லை இவ் விடயத்தைக் கருத்திற் கொண்டு அவர்களின் மாதாந்த படியினை உயர்த்தி சமூக செயற்பாடுகளில் முழு நேரமும் ஈடுபடும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கு இம் மாகாண சபையின் மூலம் மத்தியஸ்தம் வகித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை கருதுகிறது. **(பி/vi (1)14/11)**

**02. கௌரவ கே.டி. அறுண தீபால் அவர்கள்**

மாகாண சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள விடயங்களுக்கு உரியதாக மாகாண சபையினால் இவ் வேளையில் பல எண்ணிக்கையான நியதிச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்ட போதும் இந் நியதிச் சட்டங்கள் தொடர்பாக தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் அதேபோல் மக்களிடையே காணப்படும் அறிவு மிகவும் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது. நிறைவேற்றப்பட்டுள்ள நியதிச் சட்டங்கள் மக்களிடையே பரிமாற்றம் அடையாமை இதற்கு பிரதான காரணம் ஒன்று என்பது தெரியவந்துள்ளது. எனவே மேல் மாகாண மாகாண சபையினால் நிறைவேற்றப்பட்டுள்ள எல்லா நியதிச் சட்டங்களையும் பதிப்புச் செய்து மக்களுக்கு கொள்வனவு செய்வதற்கு சந்தர்ப்பத்தை பெற்றுக் கொடுக்க வேண்டும் எனவும் அந்த நியதிச் சட்டங்கள் மற்றும் மாகாண சபையினால் வெளியிடப்படும் ஏனைய பொது ஆவணங்களை பொது மக்களுக்கு கொள்வனவு செய்வதற்கு ஏற்ற முறையில் வேறாக விற்பதற்கு விற்பனை நிலையம் ஒன்றினை ஸ்தாபிக்க வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை கருதுகின்றது. **(பி/vi (1)14/12)**

## XI. பொது நடவடிக்கை

**01. கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சர் (மே.மா)**

**<u>நிதிக் கூற்றின் திருத்தம்</u> 2015**
**மேல் மாகாண மாகாண சபை**

மேல் மாகாண சபையினால் நிறைவேற்றப்பட்டுள்ள 2015 நிதி ஆண்டிற்கான நிதிக் கூற்றானது, 2015.09.14 ஆந் திகதி மேல் மாகாணத்தின் கௌரவ ஆளுநரினால் நியமிக்கப்பட்டு, உறுதியுரை / சத்தியப்பிரமாணம் செய்த புதிய கௌரவ அமைச்சரவையின் அமைச்சர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட விடயங்களுக்கு ஏற்ற முறையில் திருத்தப்பட வேண்டியுள்ள படியால் அதற்கென சமர்ப்பிக்கப்படும் நிதிக் கூற்றின் - திருத்தம் - 2015 ஐ அங்கீகரிக்க வேண்டும்.

**02. கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சர் (மே.மா)**

**<u>நிதிக் கூற்றின் - திருத்தம் - 2015 க்குரிய ஒதுக்கீட்டுத் (திருத்த) நியதிச் சட்டம்</u>**

2015 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றின் - திருத்தம் - 2015 க்கு ஏற்ற முறையில், 2014 இன் 06 ஆம் இலக்க ஒதுக்கீட்டு நியதிச் சட்டத்தினைத் திருத்துவதற்கான 2015 இன் .... ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) நியதிச் சட்டத்தை அங்கீகரிக்க வேண்டும்.

## XII. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

2015.10.07 ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, Bஅலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.